**தமிழ்நாடு அரசு**

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006**

**தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, நவம்பர் – 2021**

# செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

நவம்பர் 2021– இல் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **01.10.2021** அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் **11.10.2021 (திங்கள்கிழமை முதல் 18.10.2021 ( திங்கள்கிழமை ) வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.45 வரை** (14.10.2021 முதல் 17.10.2021 வரையிலான விடுமுறை நாட்கள் நீங்கலாக) **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) நேரில் சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம். **மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 20.10.2021 அன்று தட்கல் திட்டத்தில் ரூ.500/– கூடுதலாக செலுத்தி விண்ணப்பிக்கலாம்.**

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– மற்றும் ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/–மொத்தம் ரூ.175/–ஐ பணமாக சேவை மையங்களில் நேரடியாக செலுத்தலாம். **தட்கலில் விண்ணப்பித்த தேர்வர்கள் தட்கல் விண்ணப்ப கட்டணத்தொகை ரூ.675/– செலுத்தவேண்டும்.( 125 + 50 + 500 )**

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1. முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் சான்றிடப்பட்ட தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2.ஏற்கனவே எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- தனித்தேர்வர்கள் ரூ.42–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, பின்கோடுடன் கூடிய சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

ஒம்/-
**இயக்குநர்**

இடம் : சென்னை–600 006
நாள் : 05.10.2021